கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 266/2019

வாதி தரப்பு சாட்சி-1 சண்முகவள்ளி திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 16.12.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். 4 முதல் 7 பிரதிவாதிகள் மீது என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது கணவரின் பணிபதிவேட்டில் எனது மகன் பெயரையும் சேர்த்துள்ளார். எனவே அவரது பணிக்கொடையை எனது மகனுக்கு உரிய பாகத்தை தர வேண்டும் என கேட்டுள்ளேன். நாகராஜ் என்பவர் எனது கணவர். நாகராஜ் யாரை திருமணம் செய்து கொண்டார் என்றால் முருகாயி என்பவரை திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். என்னுடன் 30 வருடங்களாக சேர்ந்து வாழ்ந்து வந்தார். எனக்கு வேறு ஒருவருடன் திருமணம் நடந்ததா என்றால் நான் நாகராஜ்வுடன் வாழ்ந்த போது எனக்கு பிடிக்காத ஒரு சொக்கன் என்பவருடன் திருமணம் நடந்தது.

2. எனக்கும் சொக்கனுக்கும் நடந்த திருமணம் எந்த நீதிமன்றத்திலும் தற்போது வரை சட்டப்படி இரத்து செய்யப்பட வில்லை என்றால் சரிதான். மணிவேலுக்கு எத்தனை வயது என்றால் 17 வயதாகிறது. சொக்கனுடன் எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் அவருடன் நான் வாழவே இல்லை. மணிவேல் எனக்கும் நாகராஜ் என்பவருக்கும் பிறந்த குழந்தை என்பதை காட்ட பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் நாகராஜ்வுடன் வாழ்ந்ததை நிரூபிக்க வாக்காளர் அடையாள அட்டையோ, குடும்ப அட்டையோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அரசு அதிகாரிகள் நாகராஜ் சொத்துக்களை பராமரிக்ககிறார்களா என்றால் இல்லை. அவரது பணிக்கொடைகள் அரசு அதிகாரிகளிடம் உள்ளது. 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் பாகம் பிரித்து தர பலமுறை கேட்டதாக சொல்லியுள்ள நிலையில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் அனுப்பியுள்ளேன்.

3. நாகராஜ் எப்போது பணி ஓய்வு பெற்றார் என்றால் அவர் இறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு பணி ஓய்வு பெற்றார். பணியில் இருந்த போது விபத்து நடந்தது. விபத்து நடத்தது சம்மந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. நாகராஜ் ஓய்வு பெற்ற பிறகு பணிக்கொடைகளை அவரே வாங்கியுள்ளார் என்றால் சரிதான். நாகராஜ் பணி ஓய்வுக்கு பிறகு ஓய்வூதியம் வாங்கினாரா என்றால் இல்லை. நாகராஜ் பணிபதிவேட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அது அலுவலகத்தில் உள்ளது. அரசு அதிகாரிகளிடம் ஏதேனும் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. நேரடியாக சென்று கேட்டேன். பேசி முடித்து கொண்டு வந்து வாங்கி கொள்ளுமாறு சொன்னார்கள். நான் கோரிக்கை மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சட்டத்திற்குட்பட்டு தான் அரசு அதிகாரிகள் முறையாக செயல்பட்டுள்ளார்கள் என்றும், எனவே அவர்கள் இவ்வழக்கில் தேவையற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல. அவர்களுக்கு எதிராக இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால்சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additioanl District Munsif,**
**Kulithalai.**